செ.வெ.எண்: 543 நாள்: 03.09.2020

# தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு பெண்குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் பிறந்து விண்ணப்பித்த பயனாளிகளுக்கு முதிர்வு தொகை பெற மாவட்ட ஆட்சித்தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் அழைப்பு.

சமூக நலத்துறையின் வாயிலாக இரண்டு பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் பிறந்து விண்ணப்பித்த பயனாளிகள் தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதிக்கழகம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி நிறுவனத்தின் மூலம் வைப்புத்தொகை ரசீது (Deposit Bond) பெற்ற 18 வயது முதிர்வடைந்த அனைத்து பயனாளிகளும் முதிர்வு தொகை பெறுவதற்கு கீழ்காணும் ஆவணங்களுடன் தஞ்சாவூர் மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு நேரில் வந்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதிர்வு தொகை பெறுவதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் விவரம்: 1. வைப்புத் தொகை ரசீது 2. 10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் நகல் 3. பயனாளியின் ஆதார் அட்டை நகல் 4. வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் 5. தாயார் மற்றும் பயனாளியின் வண்ணப்புகைப்படம், ஆகியவற்றுடன் தாயாரும், பயனாளியும் அறை எண் 303, 3வது தளம், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு நேரில் வந்து விண்ணப்பித்து பயன்பெறுமாறும்,

இரண்டு பெண்குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் இரண்டு பெண்குழந்தை பெற்ற தாய்மார்கள் தங்களது இரண்டாவது குழந்தை பிறந்து 3 வயதிற்குள் தங்கள் பகுதிக்குட்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரியும் சமூக நல விரிவாக்க அலுவலர் (MS), மற்றும் மகளிர் ஊர்நல அலுவலர் (GS) அவர்களை அணுகி விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.